வத்தள மாபோல நகர சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

வத்தள மாபோல நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) உப விரிவுடன் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, வத்தள மாபோல நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையில 1.6.2 (அ) மற்றும் (ஆ) பந்திகளின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் பந்தி 2.5 இன் படி நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டண பெறுமதி ரூபா 62,420,625 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும்.
(ஆ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.31 இன் படி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சலுக்கு மீளாய்வாண்டின் மிகையினை சீராக்கல் மேற்கொண்ட போது பெறுமானத்தேய்வு ரூபா 15,590,242 தொகைக்கு பதிலாக ரூபா 15,438,438 தொகையென ரூபா	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும்.

	151,804 தொகை குறைவாகவும் மற்றும் பெற வேண்டியவைகளின் வித்தியாசம் ரூபா 5,854,787 தொகைக்கு பதிலாக ரூபா 6,050,036 தொகை என ரூபா 195,249 தொகை மிகையாக சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.		
(இ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.29 இன் படி முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 201,757,372 தொகை எனினும் ரூபா 202,435,672 தொகை என ரூபா 678,300 தொகை மிகையாகவும், உபகரண விற்பனையின் போது கிடைத்திருந்த பணம் ரூபா 1,250 தொகை எனினும், அதற்குப் பதிலாக ரூபா 6,518,606 தொகை என ரூபா 6,517,356 தொகை மிகையாகவும் பணமாகக் கிடைத்திருந்த வட்டி ரூபா 12,428,309 தொகை எனினும் அதற்குப் பதிலாக ரூபா 2,589,096 தொகை என ரூபா 9,839,212 தொகை குறைவாகவும் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும்.
(ஈ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.5 இன் படி நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற விடயங்கள் சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் ஒரு காலப்பகுதியில் இருந்து அடுத்த காலப்பகுதிக்கு அவ்வாறே பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம் மாற்றங்களின் கூற்றில் எல்.ஜீ 41/3 பொதுப் படிவத்தின் படி தயாரித்திருக்கவில்லை.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆண்டின் போது கிராமிய பாதைகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்த 2 செயற்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,566,045 தொகைக்காக கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கம் மற்றும் பெறவேண்டிய மூலதன மானியம் மீளாய்வாண்டின் போதும் சரி செய்திருக்கவில்லை.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்ப மீதியுடன் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2023 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 225,909 இற்கான அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றிற்குரிய கிரயம், ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபரகணங்களின் கீழ் மூலதனப்படுத்துவதற்கு பதிலாக செலவொன்றென சீராக்கல்	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கல்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்ப மீதியுடன் சீராக்கல்

	மேற்கொண்டிருத்தல் மீளாய்வாண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.		மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய மூலதன மானியம் ரூபா 4,673,387 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த மூலதன செலவிற்கான மானியத்தின் கூட்டுத்தொகை ரூபா 193,652,646 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் அதனை 198,136,737 தொகை என அகல்விரிவான வருமானக் கூற்றில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,484,091 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(உ)	மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்தினால் மாற்றப்பட்டவைகள் என ரூபா 610,628 தொகை அகல்விரிவான வருமானக் கூற்றில் வருவாய்க்கு குறைவாக இனங்காணப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஊ)	நாட்குறிப்பு 40 இன் மூலம் நூலகப் புத்தகக் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டிய ரூபா 728,430 தொகை வரவு வைத்திருக்காததுடன், மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 173,128,151 தொகைக்கு பதிலாக ரூபா 172,449,851 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 728,430 தொகையினால் குறைவாகவும் மற்றும் மூலதன மானியங்கள் ரூபா 678,300 தொகையினால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நாட்குறிப்பு பதிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்கள் சரியாக கணக்குகளில் உட்படுத்தப்பட வேண்டும்.
(எ)	நாட்குறிப்பு 66 இன் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்கள் கணக்குகளில் பதிவொன்று செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் கடன்பட்டோர் மற்றும் மூலதன மானியங்கள் ரூபா 7,202,305 தொகை வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நாட்குறிப்பு பதிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டிற்குரிய மோட்டார் வாகனப் பெறுமானத்தேய்வு ரூபா 2,980,891 தொகையாக காணப்பட வேண்டிய போதிலும் அதனை ரூபா 3,383,033 தொகையென ரூபா 402,142 தொகை மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஐ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மீதி ரூபா 6,499,022,413 தொகை எனினும் அத் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் தேறிய	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	கணக்குகள் சமப்படுத்தப்பட வேண்டும்.

சொத்துக்கள்/ உரிமை மூலதனம் ரூபா 6,534,319,274 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூப 35,296,861 தொகையினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று நிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஒ) நாட்குறிப்புப் பதிவொன்றின் மூலம் பலவின கடன்கொடுத்தோர் கணக்கு ரூபா 755,371 தொகை வரவு மற்றும் நடைமுறை வேலை பாதைக் கணக்கு அந்த எண்ணிக்கையினால் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் நடைமுறை வேலைப் பாதைக் கணக்கு செலவுப் பதிவுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நடைமுறை வேலை பாதைக் கணக்கு ரூபா 755,371 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	நாட்குறிப்பு பதிவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஓ) 2023 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 8,150,079 இற்கான தொங்கல் கணக்கில் வரவு மீதியை சரி செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	தொங்கல் கணக்கு மீதியை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஔ) அகல்விரிவான வருமானக் கூற்றில் ஆண்டிற்கான ஏனைய அகல்விரிவான வருமானங்கள் ரூபா 197,089,718 தொகையாக இருந்த போதிலும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மிகையில் உட்படுத்தப்பட்டிருக்காத மூலதன செலவுக் கொடுப்பனவு ரூபா 181,487,211 தொகை என காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என.	சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள 06 கணக்கு மீதிகள் நிதிக்கூற்றுக்களின் படி மீதி மற்றும் அட்டவணைகளின் படி மீதிகளின் இடையே ரூபா 24,139,600 இற்கான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	2025 நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என.	அட்டவணைகள் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் சென்று அதன்படி கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு	வீதவரி 5 வருடங்களுக்கு ஒரு முறை விலைமதிப்பீட்டுத்	2025 ஆண்டில் புதிய பெறுமதி மதிப்பீட்டிற்கான	சட்டத்தின் அறிவுரைகளின் படி செயற்பட்டு

	செய்தல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2009 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் சிட்டையிடப்பட்டிருந்தது.	வருடாந்த பெறுமதி தொடர்பாக கணிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என.	சபைக்கு உச்சமட்ட வருமானம் ஒன்றினை பெறக் கூடியவாறு செயற்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104	2024 ஜனவரி, மே மற்றும் ஜூன் மாதங்களில் 03 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி விசாரணைகள் நடாத்தியிருக்கவில்லை.	நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	பெறுமானங்களின் படி விசாரணை நடாத்தி பொறுப்பானவர்களை தீர்மானிக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 29,310,500 தொகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 82,282,720 தொகையாக காணப்பட்டது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2008, 2009 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக வீதவரி மற்றும் கடை வாடகையாக கிடைத்திருந்த ரூபா 235,699 தொகைக்கான 03 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவை மீதி அறவீடு செய்ய முடியாத தொகையொன்றென விசாரணைக் குழுவின் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என.	தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீட்டு வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பீட்டு வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000
வீதவரி மற்றும் வரி	60,627	59,630	67,764	54,386	57,393	60,027	71,580	54,376
வாடகை	30,431	34,085	6,345	21,302	21,123	27,410	26576,	,17684
அனுமதிப்பத்திரக் கட்டணம்	3,552	1,326	3,089	16	954	1,106	1,099	1,769
ஏனைய வருமானங்கள்	100,856	-	91,016	-	190,723	-	223,429	-
மொத்தம்	**195,466**	**95,041**	**168,214**	**75,704**	**270,193**	**88,543**	**322,684**	**73,879**

2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆண்டிற்கு நேரொப்ப நடைமுறை ஆண்டில் வருமானம் சேகரித்தல் 51 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.	பதில் அளிக்கப்படவில்லை.	வருமானம் விரைவாக அறவீடு செய்து பணத்தினை செயற்திறனுடன் ஈடுபடுத்துவதற்கு செயற்பட வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வீதவரி மற்றும் வரி நிலுவை மீதி ஆகிய ரூபா 54,386,185 தொகையில் ரூபா 7,332,147 தொகை நடைமுறை ஆண்டிற்கும் ரூபா 6,142,781 தொகை 1 வருடத்திற்கும் 3 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தை சேர்ந்தது எனவும், ரூபா 6,725,645 தொகை 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரியவை எனவும், ரூபா 22,839,544 தொகை 5 வருடங்களுக்கும் 10 வடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரியவை எனவும், ரூபா 11,346,068 தொகை 10 வருடங்களை விட பழமையான மீதிகளாகக் காணப்பட்டது.	சபை ஊழியர்களை ஈடுபடுத்தி அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் பதிவேடுகளை சரி செய்வதற்காக இனங்காணல் மற்றும் அது தொடர்பான கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதன் மூலம் நிலுவை தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 21,304,928 தொகைக்கான நிலுவை வாடகை வருமானத்தில் 88 சதவீதம் அதாவது ரூபா 18,699,045 தொகை 10 வருடங்களை விட மிகப் பழமையான மீதிகளாகக் காணப்பட்டது.	அறவீடு செய்ய முடியாத நிலுவை வாடகை வருமானத்தில் ரூபா 12,495,427.87 இற்கான தொகையொன்று பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை மீதி தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கொழும்பு நீர்கொழும்பு வீதியில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 14 அறிவித்தல் பலகைகளிலிருந்து 06 அறிவித்தல் பலகைகளுக்கான கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.	அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்து பணத்தினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2021 ஆண்டு முதல் மீளாய்வாண்டு ஆரம்பம் வரை 05 செயற்திட்டங்கள் தொடர்பாக வத்தளை பிரதேச செயலகத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,566,044 இற்கான தொகையினை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என.	பெற வேண்டிய பணத்தினை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
	மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 3,000,000 தொகையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த சாந்த நிகலஸ் மாவத்த எவரிவத்த பாதையை அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(அ)	2021 செப்தெம்பர் 29 திகதிய 01/2021 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரிசோதனை செய்து உறுதிப்படுத்திய பின்னர் குறிப்பிட்ட சங்கத்திற்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட வேண்டிய போதிலும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்தாமல் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது.	சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வருடாந்தம் இந்த நகர சபைக்குரிய 03 சமூக அபிவிருத்தி சங்கங்களின் செயற்பாடுகளை பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும்.
(ஆ)	மேற்கூறிய 3.2(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் 2.3(i) கீழ் சங்கத்தில் நிதி வளங்கள் காணப்படுகின்றது என மற்றும் அதற்காக இலங்கை வங்கியில் கணக்கொன்று காணப்படுகின்றது எனவும் மற்றும் அதில் ரூபா 1,158,087.02 இற்கான மீதியொன்று	2025 ஆண்டு செயற்படுகின்ற கோப்புக்களுக்காக வங்கிக் கணக்கு மீதியின் பிரதியொன்று உட்படுத்துவதற்கு	சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும்.

	காணப்படுகின்றது என ஒப்பந்த வேலை வழங்கப்படும் போது உரிய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கிக் கணக்குப் பற்று வரவுப் புத்தகத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று பெற்றுக் கொண்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும் என.	
(இ)	அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.2 இன் பிரகாரம் சபையினால் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தொழிற்பாடுகள் மற்றும் காலம் சுட்டிக் காட்டப்பட்டு நேரசூசி ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அரச பெறுகை வழிகாட்டலின் படி நேரசூசி ஒன்று தயாரித்து கோப்பில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும்.

3.3 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் சிரேஷ்ட மட்ட 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்ட 10 வெற்றிடங்களும், ஆரம்ப மட்ட 13 வெற்றிடங்களும் ஆக 25 வெற்றிடங்கள் காணப்பட்டது.	அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பும் படி வேண்டப்பட்டுள்ளது என.	நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடியவாறு ஊழியர் முகாமைத்துவம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.